*கவனிக்க.- 29.04.2022 ஆந் திகதிய 2278 ஆம் இலக்க வர்த்தமானியன் பகுதி IV (அ) பிரசுரிக்கவில்லை*

*கவனிக்க.- 2022.05.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலையங்களின் யூரிமார் பெயர் பட்டியலொன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2279 - 2022 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2022.05.06

*2279 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 824 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

823 - B82342 - 5403 (2022/04)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாத்தளை பிரதேச சபை

*1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்ப்பைக் கோருதல்*

மாத்தளை பிரதேச சபை 2022, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 5.5 இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

யூ. எச். எம். கபில பண்டார ஹேரன்தெனிய,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2022, ஏப்பிறல் 20.

**தீர்மானம்**

1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இங்கு அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரால் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 2022 ஆம் ஆண்டில் விலங்கு அறுவை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதை எதிர்க்கும் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் இரட்டைப் பிரதிகளில் மாத்தளை பிரதேச சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 07(2) ஆவது பிரிவின் கீழ் மாத்தளை பிரதேச சபை இத்தால் முன்மொழிகின்றது.

**அட்டவணை**

| விண்ணப்பிப்பவர் பெயர் | விலங்கு அறுவை நிலையம் நடாத்தப்படுமிடம் | விலங்கின் வகை |
|---|---|---|
| ரெஜினோல்ட் சுமித் மரியோதா த அல்விஸ்,<br>பேப்பர் வெலி பண்ணை தனியார் கம்பனி,<br>கிரிபெனிவத்த, கோன்கஹமுல சந்தி,<br>பலாபத்வல. | கிரிபெனிவத்த,<br>கோன்கஹமுவ சந்தி,<br>பலாபத்வல. | பன்றி |

05-57

---

## மாத்தறை மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் இடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகளுக்கான பெயரிடல் பின்வருமாறு தீர்மானித்துள்ளது.

மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் 71(1) மாநகர சபை கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1989 ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் மாகாண சபையின் ( தொடர் ஒழுங்குவிதியின்படி) கட்டளைச் சட்டத்தின் 2(1) (அ) பிரிவிற்கமைய பிரதான ஆளுனர் அவர்களினால் பெற்றுத் தந்த அனுமதியின்படி கீழே குறித்த அட்டவணையின் விபரிக்கப்பட்டவாறு, தற்போதைய பெயரில் உள்ள வீதிகளுக்கு புதிய பெயர்கள் இடப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

கான்சனா கே. தல்பாவில,
மாத்தறை மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2022, மாச்சு 24.

**அட்டவணை**

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டம் | வீதியின் தற்போதைய பெயர் | புதிதாக வைக்கப்பட்ட பெயர் | வீதியின் விபரம் |
|---|---|---|---|---|---|
| 01 | மாத்தறை மாநகர சபை | மாத்தறை | மாத்தறை உயன்வத்த தர்மரத்ன மாவத்தையின் 7ஆம் ஒழுங்கை | கபிதான் என்.எஸ். ஜயவர்தன மாவத்தை | ஆரம்பம் - தர்மரத்ன மாவத்தை முடிவு - வீடு |

05-39

---

**மாத்தறை மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் இடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகளுக்கான பெயரிடல் பின்வருமாறு தீர்மானித்துள்ளது.

மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் 71(1) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் மாகாண சபையின் (தொடர் ஒழுங்கு விதியின்படி ) கட்டளைச் சட்டத்தின் 2(1) (அ) பிரிவிற்கமைய பிரதான ஆளுனர் அவர்களினால் பெற்றுத் தந்த அனுமதியின்படி கீழே குறித்த அட்டவணையின் விபரிக்கப்பட்டவாறு, தற்போதைய பெயரில் உள்ள வீதிகளுக்கு புதிய பெயர்கள் இடப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

காஞ்சனா கே. தல்பாவில,
மாத்தறை மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2022, மாச்சு 24.

**அட்டவணை**

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டம் | வீதியின் தற்போதைய பெயர் | புதிதாக வைக்கப்பட்ட பெயர் | வீதியின் விபரம் |
|---|---|---|---|---|---|
| 01 | மாத்தறை மாநகர சபை | மாத்தறை | மாத்தறை பொல்ஹேன சிறி தர்மரத்ன மாவத்தையின் முதலாம் ஒழுங்கை | சிறி தர்மரத்ன மாவத்தையின் முதலாம் ஒழுங்கை | ஆரம்பம் - சிறி தர்மரத்ன மாவத்தை முடிவு - சிறி தர்மரத்ன மாவத்தை |

05-40

# நானாவித அறிவித்தல்கள்

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

*அட்டவணை 05*

*பிரதேச சபை வாகனங்களை (சாரதியுடன்) வாடகைக்கு வழங்குவது தொடர்பான கட்டண அறவீடுகள்*

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01. | மோட்டர் கிரேடர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 6100.00 |
| 02. | ஜே. சி. பி. (ஒரு மணித்தியாலத்திற்கு) | 4320.00 |
| 03. | ரோலர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 4170.00 |
| 04. | உழவு இயந்திரம் பெட்டியுடன் - ஒரு நாளுக்கு (08 மணித்தியாலங்கள்) | 6000.00 |
| 05. | உழவு இயந்திரம் நீர்த்தாங்கியுடன் - ஒரு நாளுக்கு (08 மணித்தியாலங்கள்) | 6000.00 |
| 06. | தண்ணீர் பௌசர் - 01 | 1800.00 |

சுப்பையா ஜெகதீஸ்வரன்,
தவிசாளர்,
பிரதேச சபை,
வெங்கலச்செட்டிகுளம்.

05- 70

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.